**இரத்மலானை பல்கலைக்கழக கல்வி நிறுவனம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்மலானை பல்கலைக்கழக கல்வி நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2014 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக கல்வி நிறுவனங்களின் விவரக்குறிப்பில் 17(2) பிரிவின் ஏற்பாடுகளின் படி எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

எனது அறிக்கையின் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கல்வி நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் பந்தி 1.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்வி நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு

வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்வி நிறுவனத்தின்ன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கல்வி நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்வி நிறுவனத்திற்கான ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்வி நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து கல்வி நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது கல்வி நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையபாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

---------------------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

-----------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கல்வி நிறுவனத்தால் 2017 ஆம் ஆண்டில் மாணவர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா.1,225,000 தொகை நூலகச் வைப்புகளை, நிதி ஒழுங்குவிதி 381 இன் படி திறைசேரி அனுமதி பெற்றுக்கொள்ளாமை காரணமாக 2017 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி இரத்மலானை பல்கலைக்கழக கல்வி நிறுவனத்தின் மாணவர் நலனோம்பல் நிதியம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட வைப்புக் கணக்கில் வைப்புச் செய்திருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா. 1,354,393 ஆன அதன் மீதி நிதிக் கூற்றுகளில் கைவிடப்பட்டிருந்தது. | எதிர்வருங் காலங்களில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்குவிதிக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளு தல் வேண்டு-மென்பதுடன், கணக்குகளை செவ்வையாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ)பணிக்கொடையின் பொருட்டு ஒதுக்கீடு செய்தல், அடிப்படை சம்பளத்தை அடிப்படையாகக்-கொண்டு கணக்கிடப்படுவதால் மீளாய்விற்கான ஆண்டுக்கான பணிக்கொடை ஒதுக்கீடு பொருட்டு ரூபா.448,500 தொகை குறைவாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வருங் காலங்களில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளு-தல் வேண்டு |

**1.5.3 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்வற்றுக்கான தொடர் - | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்-தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியர-சின் நிதி ஒழுங்கு-விதி கோவை-நிதி ஒழுங்குவிதி 94(1) | வேறு வகையில் ஏற்பாடுகள் அளிக்கப்படாதவிடத்து வருடாந்த மதிப்பீடுகளில் அதற்கான ஒதுக்கீடுகள் இருப்பின் மட்டுமேயின்றி எந்தவொரு திணைக்களத்-தாலும், வேலை அல்லது சேவை அல்லது வழங்கல் என்பவற்றுக்கு பொறுப்புகளை ஏற்காதிருத்தல் வேண்டு-மாயினும், கல்வி நிருவனம் 2018 ஆம் ஆண்டில் ரூபா. 7,964,770 பெறுமதியான உபகரணங்களை கடன் அடிப்படையில் கொள்வனவு செய்திருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் பொது திறைசேரி மூலதன அளப்புகளிலிருந்து அந்தச் செலவுகளை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் முறை-யாக கொள்-வனவு செயற்பாடு-களை மேற்கொள்-வதற்கு நடவடி-க்கை எடுக்கப்-பட்டுள்ளது. | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ)1994 ஆம் ஆண்டு 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க அரச தொழிற் திணைக்களத்து சுற்றறிக்கை | அலுவலர்களின் கொடுப்பனவு மற்றும் ஏனைய நிதி உதவிகள் கொடுப்பனவு செய்வதற்காக அமைச்சரவை, அரச நிருவாக அமைச்சு அல்லது திறைசேரி என்பவற்றின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டு-மாயினும். அதற்கு முரணாக கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதிக்கமைவாக விடைத்தாள்களுக்கு புள்ளிகள் வழங்குதல், பரீட்சை கண்காணிப்பு மற்றும் வினாத்தாள் தயாரித்தல் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 956,465 செலவிடப்பட்டிருந்தது. | மாணவர்களின் கல்வி நடவடி-க்கைகளுக்கு தடை ஏற்படாத வகையில் பரீட்சை செயற்பாடுகளை நடாத்திச் செல்வ-தற்கு இச் சுற்ற-றிக்கைபடி நடவ-டிக்கைகள் மேற்-கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை உயர் கல்வி, தொழிநுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சுமூலம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெற்றுக்-கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | சுற்றுநிருப-ங்களின் ஏற்பாடு-களுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதிய PED/ 12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 7.4.5 | கல்வி நிறுவனம் தொடர்பில் வருடாந்த பொருட் மீளாய்வு நடாத்தப்பட வேண்டுமாயினும், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் பொருட் மீளாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. | சுற்றுநிருப-ங்களின் ஏற்பாடு-களுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைபயன்**

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.149,673 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா. 1,100,693 ஆகியதால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைபயனில் ரூபா. 951,020 ஆன வீழ்ச்சியடைதல் அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீண்டுவரும் அளிப்புகளாக ரூபா. 2,402,100 ஆல் அதிகரித்திருப்பினும், தாமதமான வருமானக் கடன் ரூபா. 3,326,789 ஆல் குறைவடைதலும் ஊழியர் செலவு ரூபா. 4,573,257 ஆல் அதிகரித்திருத்தலும் இந்த வீழ்ச்சியடைதலுக்கு பிரதான காணரமாக இருந்தது.

**3. தொழில்பாட்டு மீளாய்வு**

**3.1 தொழில்பாட்டு வினைத்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கல்விக் நிறுவனத்தால் நடாத்தப்படும் அழகியல் (Cosmetology) கற்கைநெறிக் பொருட்டு, திறன் துறை சார்ந்த அபிவிருத்தி கருத்திட்டத்தின்கீழ் ஆய்வுகூடம் பழுதுபார்த்தல் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் என்பவற்றுக்கு முறையாக ரூபா.1,817,773 ம் மற்றும் ரூபா. 2,775,946 ம் செலவிடப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு வரை இரண்டு விரிவுரையாளர்களின் பொருட்டு மொத்தம் ரூபா. 1,272,507 ஆன சம்பளமும் கொடுப்பனவும் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2017/ 2020 கல்வி ஆண்டுக்கு ஏற்புடையதாக 16 | 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்-வதற்கு நடவடிக்கை எடுப்பினும், போதியளவு மாணவர்களை இல்லாமை காரணமாக அந்த கல்வி ஆண்டுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை.<br><br>இந்த ஆய்வுகூடத்தில் உள்ள வளங்களை பயன்படுத்துவதன் விளைவுத் திறனை அதிகரிப்-பதற்காக எதிர்வருங் காலங்களில் வேறு நிறுவனங்களின் பொருட்டு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | வளங்களை வினைத்திறனாக வும், விளைவுத்-திறனுடனும் பயன்படுத்துவத ற்கு நடவடி-க்கை மேற்கொ-ள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்திருந்ததுடன், அதில் 09 மாணவர்கள் கற்காது சென்றிருந்தனர். மீளாய்விற்கான ஆண்டின் இறுதி வரை மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை என்பதுடன், ஒரு விரிவுரையாளரை மட்டும் இணைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) 2019/2022 கல்வி ஆண்டுக்காக கல்வி நிறுவனத்தின் எல்லா கற்கைநெறிகளின் பொருட்டும் ஆகக்குறைந்ததாக 30 மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு வசதிகள் இருப்பினும் கற்கைநெறிகள் 08 இற்காக குறைந்த மணாவர்களின் எண்ணிக்கை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன். மாணவர்களின் எண்ணிக்கை 18 தொடக்கம் 29 வரையிலான எல்லைக்குள் காணப்பட்டது. | 2019 ஆம் ஆண்டில் அழைக்கப்பட்ட 264 மாணவர்களுக்கிடையில் 2019 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக 209 மாணவர்களை மட்டும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருப்பது, ஒரு கற்கைநெறிக்கு ஆகக் குறைந்தது 15 மாணவர்களுக்கு குறையாத வகையிலாகும். தற்போதுள்ள இடவசதிகளை கவனத்தில் கொள்கையில் ஒரு குழுவிற்கு 30 இற்கு மேற்பட்ட மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்கையில் நடைமுறை சிரமங்கள் உள்ளன. | வளங்களில் ஆகக்கூடிய பயன்களை பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் ஆகக் குறைந்த அளவில் ஆட்-சேர்பபுச் செய்-வதற்கு முடியு-மான மாணவர்-களை ஆட்சேர்-ப்புச் செய்வ-தற்கு நடவடி-க்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். |
| (இ)மீளாய்விற்கான ஆண்டில் வெளியிடப்பட்ட பரீட்சை பெறுபேறுகளின்படி 05 கற்கைநெறிகளுக்கு ஏற்புடையதாக 07 பாடங்களில் மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைவாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. சித்தியடையாத சதவீதம் 33% தொடக்கம் 56% வரை காணப்பட்டது. | மூன்றாம்நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவால் வழங்கப்படும் வழிகாட்டல்களை பூர்த்தி செய்யப்படாமையால், பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமைகள் கிடைக்காத காரணத்தால் அந்த பாடங்களை சித்தியடைவதில் சதவீதம் குறைவடைந்துள்ளது. | பரீட்சை சித்தி-யடையாமைக்-கான காரணங்-களை கண்ட-றிந்து தேவை-யான நடவடி-க்கை மேற்-கொள்வதற்கு செயலாற்றுதல் வேண்டும். |

## 3.2 பயனற்ற அல்லது குறைப்பயன்பாட்டு சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| உணவு தொழிநுட்பவியல் ஆய்வுகூடத்திற்கு 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 2,367,254 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் பயனற்று இருந்தது. அந்த உபகரணங்களை இயக்குவதற்கு தேவையான இரசாயன பொருட்கள் ஆகிய வசதிகள் இல்லாமை அதற்கு காணரமாகியிருந்ததுடன், அந்த பொருட்களின் உத்தரவாத காலமும் முடிவுற்றிருந்தது. அதேபோன்று 2015 யூலை 01 ஆந் திகதி திறன் துறைசார் அபிவிருத்தி கருத்திட்டம்மூலம் வழங்கியிருந்த ரூபவாகினி பின் உற்பத்தி தொழிநுட்பிவயல் கற்கைநெறிக்கு தேவைப்படாது என்பதுடன், ரூபா. 423,243 ஆன மேசை மற்றும் மைக்ரோபோன் (Table Microphone) 31 ம் மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை பயனற்று இருந்தன. | எதிர்வருங் காலத்தில் அந்த பொருட்கள் நிறுவனத்தின் Resource Center இல் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், இரசாயன பொருட்களை கொள்வனவு செய்யப்பட்டிருப்பது, 2019 திசெம்பர் மற்றும் 2020 சனவரி மாதங்களுக்கு இடையில் என்பதுடன். அவற்றை உரியவாறு பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. Sausage Filler உபகரணம் பொருட்டு Smoker உபகரணம் கொள்வனவு செய்த பின்னர் மேற்படி உபகரணம் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | வளங்களை வினைத்திற-னாகவும் விளைவுத்திற-னாகவும் பயன்படுத்து-வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளு தல் வெண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கல்வி நிறுவனத்தில் 05 விரிவுரையாளர் பதவிகள் நிலவியதுடன், கற்கைநெறிகளின் பொருட்டு போதியளவிலான விரிவுரையாளர்களின் எண்ணிக்கை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக வெளியக விரிவுரையாளர்களின் பொருட்டு மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 1,674,900 செலவிடப்பட்டிருந்தது. | கல்வி நிறுவனத்தின் தொழிநுட்பவியல் கற்கைநெறி நடாத்தப்படுவதால் இதன் பாடவிதானம்படி வெளியக போதனையாளர்களின் சேவை அத்தியாவசியமாவதுடன், கல்வி பணியாற்தொகுதியின் வெற்றிட-ங்களை நிரப்புவதற்கு தற்போதுள்ள நிலைமைக்-கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | கல்விசார் பணியாற்தொகுதி-யினரின் வெற்றி-டங்களை நிரப்பவதற்கு நடவடிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |